சுருக்கம்

பள்ளிக்கல்வி – மேல்நிலைப் பாடத்திட்டம் – மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டில் மாநில அளவிலான அரசு பொதுத் தேர்வு நடத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி(அ.தே.1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 100 நாள். 22.5.2017

திருவள்ளுவர் ஆண்டு
2048, ஹேவிளம்பி
வைகாசி–8.

24 மே 2017

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண்.2415, கல்வி, நாள் 5.11.1975.
2. அரசாணை நிலை எண்.2439, கல்வி, நாள் 14.11.1977.
3. அரசாணை நிலை எண். 718 கல்வி, நாள் 7.5.1979
4. அரசாணை நிலை எண்.1188, கல்வி, நாள் 12.7.1979
5. அரசாணை நிலை எண். 89 பள்ளிக்கல்வி ( க்யு) துறை நாள் 27.3.2012
6. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7/பி2/சி2/2017 நாள் 17.5.2017

------

**ஆணை:**

1964ம் ஆண்டு நடுவண் அரசால் அமைக்கப்பட்ட கோத்தாரி கல்விக் குழுவின் (1964–66) புகழ்பெற்ற ஒரு ஆவணமாக இன்றளவும் போற்றப்படுகிற அறிக்கையில் நாடு முழுவதும் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வியில் 10+2+3 என்ற அளவில் ஒரே மாதிரியான கல்வி முறை அமைக்கப்பட வேண்டும் என்ற முதன்மையான பரிந்துரையை வழங்கியது என்றும் அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றெடுத்து "தேசியக் கல்விக் கொள்கை" (1968) (National Education Policy, 1968) வகுக்கப்பட்டது என்றும் இதன் பின்னணியில் தமிழ்நாடு உட்பட்ட அனைத்து மாநிலங்களிலும் 10 ஆண்டு இடைநிலைக் கல்வி முறையும், 2 ஆண்டு மேல்நிலைக் கல்வி முறையும், 3 ஆண்டு உயர் கல்வி பட்டப்படிப்பு முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டன என்றும் தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வி முறை பள்ளி அளவில் நடத்திடத் திட்டமிடப்பட்டது என்றும் மேலே ஆறில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுத் தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

2) மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் இரண்டு ஆண்டு மேல்நிலைப் படிப்புக்கான பொதுப் பாடத்திட்டத்திற்கும் (General Stream) தொழிற்கல்வி பாடப்பிரிவுகளுக்கும் (Vocational Stream) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3) மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மேல்நிலைக் கல்வியில் அரசுப்பொதுத் தேர்வுகள் நடத்துவதற்கு திட்டம் வகுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. 1978–79–ல் தொடங்கப்பட்ட மேல்நிலைக் கல்வி முறையில், அன்றைய சூழல்களைக் கருத்தில் கொண்டு இரண்டாம் ஆண்டில் மட்டும் மாநில அளவில் அரசுப் பொதுத் தேர்வு நடத்திடலாம் எனவும் முதலாம் ஆண்டை பொறுத்தவரை மாவட்ட அளவில் மட்டும் தேர்வு நடத்திடலாம் எனவும் முடிவு செய்யப்பட்டு, அரசாணை நிலை எண். 718 கல்வி, நாள் 7.5.79ன்படி மார்ச் 1980–ல் முதல் முறையாக மாநில அளவில் மேல்நிலை இரண்டாம் ஆண்டில் மாணவர்கள் மேல்நிலைப் பொதுத் தேர்வு எழுதினர். அப்போது தேர்வு எழுதியவர்கள் எண்ணிக்கை 1.25 இலட்சம் ஆகும்.

4) பல மாநிலங்களும், மேல்நிலை வகுப்பைத் தனியாக இளங்கல்லூரிகளாக (Junior Colleges) நடத்த திட்டமிட்ட நிலையில், தமிழ்நாட்டில் மேல்நிலை வகுப்புகளைப் பள்ளிகளுடன் இணைத்து நடத்தும் சிறப்பானதொரு முடிவு எடுக்கப்பட்டது. இதன் விளைவாக, மேல்நிலைக் கல்வி வசதி, மாநிலத்தின் பல்வேறு உட்புற கிராமப் பகுதிகளுக்கும் சென்றடைந்தது. நடப்பு மார்ச் 2017–ல் மேல்நிலைப் பொதுத் தேர்வில் 8.75 இலட்சம் மாணவர்கள் பங்கெடுத்துள்ளனர் என்பது மேல்நிலைக் கல்வியின் உயரிய வளர்ச்சியினைக் காட்டுகிறது.

5) மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டபோது, ஒரு முழு பாடத்திட்டத்தின் இரு சமமான தனித்தனிப் பகுதிகளாக முதலாம் ஆண்டுப் பாடத்திட்டமும் இரண்டாம் ஆண்டுப் பாடத்திட்டமும் வகுக்கப்பட்டன. ஆனால், மாநில அளவிலான பொதுத்தேர்வு, இரண்டாம் பாதியான இரண்டாம் ஆண்டுப் பாடப்பகுதிக்கு மட்டும் நடத்தப்பட்டு வந்தது.

6) இரண்டாம் ஆண்டுப் பாடப்பகுதியில் நடத்தப்பட்டப் பொதுத்தேர்வில் மாணவர் பெறும் மதிப்பெண்களே மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம், கலை, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு உயர்கல்வி படிப்புகளுக்கான அடிப்படைகளாக அமைந்தன. இதில் மருத்துவம், பொறியியல் போன்ற உயர்கல்வி படிப்புகள் அதிமுக்கியத்துவம் பெற்றதால் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வின் மதிப்பெண்களும் அதிமுக்கியத்துவம் பெற்றன.

7) தனியார் சுயநிதிப் பள்ளிகள் பெருகிய நிலையில் பொதுத் தேர்வு மதிப்பெண்களுக்கான போட்டிச் சூழலும் வெகுவாக அதிகரித்து, பள்ளிகளில் பாடங்கள் கற்பிக்கும் அணுகுமுறையில் மேல்நிலை முதலாம் ஆண்டு பாடங்களைக் கற்பிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமல் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளும் இரண்டாம் ஆண்டு பாடப்பகுதிகளையே கற்பிப்பதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

8) இதனால், அதிகபட்ச மதிப்பெண்களைப் பெற்று, உயர்கல்விப் படிப்புகளில் சேரும் மாணவர்களும்கூட முதலாம் ஆண்டில் தடுமாறும் நிலையும் தேர்வுகளில் தோல்வியுறும் நிலையும் உருவாகியுள்ளதை அண்ணா பல்கலைக்கழகம் போன்ற புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களும் கல்வியாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர் என்றும் மேற்கண்ட நிலை தமிழகம் மட்டுமின்றி, அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்களிலும் உணரப்பட்டதால், அம்மாநில அரசுகள் மேல்நிலை முதலாம் ஆண்டில் பொதுத்தேர்வு நடத்திட முடிவெடுத்து நடைமுறைப்படுத்தியுள்ளனர் என்றும் ஆந்திரப் பிரதேசம் 1978–79 முதலே மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு நடத்திடும்

நிலையில், கேரள மாநில அரசு 2008 முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு வகுப்பிற்கு பொதுத்தேர்வு நடத்தும் நடைமுறையை அமல்படுத்தியுள்ளது என்றும் மேல்நிலை முதலாம் ஆண்டில் விருப்பப்பாடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டப் பாடப்பகுதிகளில் மாணவர்கள் போதுமான கற்றல் அடைவினைப் பெறாத நிலையில், அகில இந்திய அளவில் நடத்தப்பெறும் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட பல்வேறு போட்டி நுழைவுத் தேர்வுகளிலும் Kishore Vaigyanik Protsahan Yojana(KVPY) உள்ளிட்டத் திறன் தேர்வுகளிலும் தமிழக மாணவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் மேலே 6ல் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுத் தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

9) இந்நிலையில், தமிழகப் பள்ளிக் கல்வியின் தரத்தை ஆய்வுசெய்து முன்னேற்ற வழிவகைகளைக் கண்டறிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மூத்த கல்வியாளர்கள் அடங்கிய வல்லுநர் குழு ஒன்று மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் அமைக்கப்பட்டது. அக்குழுவிற்கு அளிக்கப்பட்டப் பணிகளில், "மேம்படுத்தப்பட்ட கல்வி முறைக்கேற்ப தேர்வு முறையில் சீர்த்திருத்தங்கள் பரிந்துரை செய்தல்" என்ற பணியும் ஒதுக்கப்பட்டது. வல்லுநர் குழு பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு மூன்று துணைக் குழுக்களை அமைக்க முடிவு செய்தது. அவற்றில் ஒன்று தேர்வுகள் சீர்த்திருத்தக் குழு. தேர்வுகள் சீர்த்திருத்தக் குழு தமது அறிக்கையில் மேல்நிலை முதலாம் ஆண்டிலும் பொதுத் தேர்வு ஒன்றினை நடத்துவது அவசியம் என்ற பரிந்துரையை வல்லுநர் குழுவுக்கு வழங்கியது.

10) துணைக்குழுவின் ஆலோசனையை ஆழ்ந்த பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட 'வல்லுநர்குழு' மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு, இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கூடிய தனது 11.05.2017 நாள் கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

> *"தமிழகத்தில் தற்போது மேல்நிலை வகுப்புகளில் இரண்டாம் ஆண்டு பாடத்திட்டத்திற்கு மட்டும் பொதுத் தேர்வு நடத்தப்பட்டு அதில் பெறப்படும் மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வுத் துறையால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. முதலாம் ஆண்டு பாடத்தில் மாவட்ட அளவில் தேர்வுகள் நடத்தப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. பல பள்ளிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிர்வாகங்கள் முதலாம் ஆண்டு பாடங்களைக் கற்பிப்பதில், கற்றுக்கொள்வதில் முழு கவனம் செலுத்தாத சூழ்நிலை உள்ளது. ஆனால் போட்டித் தேர்வுகளில் மேல்நிலை முதலாம் ஆண்டு பாடத்திட்டத்திலிருந்து ஏறத்தாழ 50 விழுக்காடுக்கான வினாக்கள் கேட்கப்படுகின்றன. மேலும், மேல்நிலை வகுப்பு பயிலும் மாணவர்கள் குறிப்பிட்ட அறிவுத்திறனைப் பெற வேண்டும் என கல்வியாளர்களால் வடிவமைக்கப்பட்ட முதலாம் ஆண்டு பாடத்திட்ட பாடங்கள் முறையாக மாணவர்களுக்குக் கற்பிக்கப்படாததன் விளைவாக மேல்நிலைப் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டதன் நோக்கம் முழுமை பெறாத நிலையே உள்ளது. இதுபோன்ற சூழலை எதிர்கொள்ளும் வகையில் ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்குப் பொதுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அத்தேர்வுகளில் பெறும் மதிப்பெண்களும் இரண்டாம் ஆண்டுத் தேர்வுகளில் பெறும் மதிப்பெண்களும் சேர்த்து சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அதே முறையைப் பின்பற்றி தமிழகத்திலும் மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கும் பொதுத்தேர்வினை (Public*

*Examinations) இந்த ஆண்டு (2017–18) முதலே தேர்வுத் துறை வாயிலாக நடத்தலாம்."*

11) மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வு மதிப்பெண்கள் உயர்கல்விக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாததால் உயர் கல்விக்கு அடிப்படையாக அமையும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பாடத் திட்டத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை முதலாம் ஆண்டு பாடங்களுக்குக் கொடுப்பதில்லை என்பதால் உயர்கல்வியில் மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்றும் அகில இந்திய அளவில் நடைபெறும் IIT-JEE, NEET, CLAT., உள்ளிட்ட பல்வேறு தேர்வுகளைச் சந்திக்க முதலாம் ஆண்டில் பொதுத் தேர்வுகள் நடத்துவது மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்றும் மேலும், மேல்நிலைக் கல்வி அளவில், தான் விரும்பி எடுத்த விருப்பப் பாடங்களில் மாணவர்கள் வலுவான அடித்தளம் பெறவேண்டியது அவர்களுடைய எதிர்கால கல்விக்கு மிக அவசியமானது என்றும் மேலே 6ல் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுத் தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துக் கொண்டு கீழ்க்கண்டவாறு முன்மொழிவுகளை அரசுக்கு சமர்ப்பித்து அதற்கான ஆணையினை வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் கோரியுள்ளார்.

அ. 2017–18ஆம் ஆண்டில் இருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசு பொதுத் தேர்வுகள் நடத்தலாம்.

ஆ. மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்விற்கு 600 மதிப்பெண்களும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்விற்கு 600 மதிப்பெண்களும் என இரண்டு ஆண்டுகளுக்கும் சமமான முக்கியத்துவம் (Equal Weightage) அளிக்கும் வகையில் மொத்தம் 1200 மதிப்பெண்கள் வழங்கலாம்.

இ. மேல்நிலை முதலாம் ஆண்டில் பொதுத் தேர்வில் சில பாடங்களில் தோல்வியுறும் மாணவர்கள் ஆண்டு விரயமின்றி இரண்டாம் ஆண்டிற்குச் செல்லவும், தோல்வியுற்ற பாடத்தை / பாடங்களை ஜூன்/ஜூலை மாதத்தில் நடைபெறும் உடனடி சிறப்புத் தேர்விலோ அல்லது இரண்டாம் ஆண்டு இறுதித் தேர்வின்போதோ அல்லது இரண்டிலுமோ பின்னடைவுப்பாடமாக (arrear) கல்லூரிகளில் உள்ளது போன்ற நடைமுறையில் தேர்வு எழுதிக் கொள்ளலாம்.

ஈ. அனைத்துப் பாடங்களிலும் மாணவர்கள் தொடர் கற்றலை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு பாடத்திலும் 10 விழுக்காடு மதிப்பெண்கள் அகமதிப்பீடாக அளிக்கலாம்.

உ. மேலும் தற்போது நடைமுறையில் உள்ள 3 மணி நேர பொதுத்தேர்வின் கால அளவைத் தேர்வு முறையில் கொண்டு வந்துள்ள புதிய மாற்றத்தை கருத்தில் கொண்டு வினாக்களைக் குறைத்து 2½ மணி நேரமாகக் குறைக்கலாம்.

ஊ. ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்ச தேர்ச்சி விழுக்காடு 35 சதவிகிதமாக நிர்ணயம் செய்யலாம்.

எ. முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வினை இரண்டாம் ஆண்டு நடைபெறும் செய்முறைத் தேர்வுடன் இணைத்து நடத்தலாம்.

ஏ. இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்குப் பின்னர் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த சான்றிதழ் (Consolidated Marksheet) வழங்கலாம்.

ஐ. மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மதிப்பெண் வழங்கும் நடைமுறை அதாவது தேர்வுத் திட்டம் (Scheme of Examinations) இணைப்பு 1ல் கண்டுள்ளவாறு நடைமுறைப் படுத்தலாம்.

12) மேலே அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்கள் மற்றும் வல்லுநர் குழுவின் தீர்மானம் ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்ததில் மேல்நிலைக் கல்வியின் தோற்றம், வளர்ச்சி, அதன் தற்கால பரிணாமம், இன்றைய உலகளாவிய கல்விச் சூழல், தேசிய அளவிலான போட்டிச் சூழல், மாணவர்களின் எதிர்காலக் கல்வி வளர்ச்சி இவற்றையெல்லாம் அரசு கருதிப் பார்த்து அரசுத் தேர்வுகளின் இயக்குநரின் கருத்துருவினை ஏற்று கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

அ. 2017–18ஆம் ஆண்டில் இருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசு பொதுத் தேர்வுகள் நடத்தப்படும்.

ஆ. மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்விற்கு 600 மதிப்பெண்களும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்விற்கு 600 மதிப்பெண்களும் என இரண்டு ஆண்டுகளுக்கும் சமமான முக்கியத்துவம் (Equal Weightage) அளிக்கும் வகையில் மொத்தம் 1200 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

இ. மேல்நிலை முதலாம் ஆண்டில் பொதுத் தேர்வில் சில பாடங்களில் தோல்வியுறும் மாணவர்கள் ஆண்டு விரயமின்றி இரண்டாம் ஆண்டிற்குச் செல்லவும், தோல்வியுற்ற பாடத்தை / பாடங்களை ஜூன்/ஜூலை மாதத்தில் நடைபெறும் உடனடி சிறப்புத் தேர்விலோ அல்லது இரண்டாம் ஆண்டு இறுதித் தேர்வின்போதோ அல்லது இரண்டிலுமோ பின்னடைவுப்பாடமாக (arrear) கல்லூரிகளில் உள்ளது போன்ற நடைமுறையில் தேர்வு எழுதிக் கொள்ளலாம்.

ஈ. அனைத்துப் பாடங்களிலும் மாணவர்கள் தொடர் கற்றலை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு பாடத்திலும் 10 விழுக்காடு மதிப்பெண்கள் அகமதிப்பீடாக அளிக்கப்படும்.

உ. மேலும் தற்போது நடைமுறையில் உள்ள 3 மணி நேர பொதுத்தேர்வின் கால அளவைத் தேர்வு முறையில் கொண்டு வந்துள்ள புதிய மாற்றத்தை கருத்தில் கொண்டு வினாக்களைக் குறைத்து 2½ மணி நேரமாகக் குறைக்கப்படுகிறது.

ஊ. ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்ச தேர்ச்சி விழுக்காடு 35 சதவிகிதமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

எ. முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வினை இரண்டாம் ஆண்டு நடைபெறும் செய்முறைத் தேர்வுடன் இணைத்து நடத்தப்படும்.

ஏ. இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்குப் பின்னர் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த சான்றிதழ் (Consolidated Marksheet) வழங்கப்படும்.

ஐ. மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மதிப்பெண் வழங்கும் நடைமுறை, அதாவது தேர்வுத்திட்டம் (Scheme of Examination), இணைப்பு Iல் கண்டுள்ளவாறு நடைமுறைப் படுத்தப்படும்.

13) இவ்வரசாணை வருகின்ற 2017–18ம் கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வருகிறது.

14) மேலே பத்தி 12ல் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளை 2017–18ம் கல்வியாண்டிலிருந்து நடைமுறைப் படுத்துவதற்கு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.உதயச்சந்திரன்
அரசுச் செயலாளர்

பெறுநர்

அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
இயக்குநர், சமூகநல இயக்ககம், சென்னை–32.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம், சென்னை–5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம், சென்னை–5.
முதன்மை தலைமை வனப் பாதுகாவாலர், சென்னை–15.
இயக்குநர், சமூகப் பாதுகாப்பு இயக்ககம், சென்னை.
இயக்குநர், கல்லூரி கல்வி இயக்ககம், சென்னை–6.
இயக்குநர், தொழிற்கல்வி இயக்ககம், சென்னை.
அனைத்துப் பல்கலைக்கழக பதிவாளர்கள்,
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத் துறை இயக்ககம்,
சென்னை–79 (தமிழக அரசிதழில் வெளியிடுவதற்காக)
இயக்குநர், தகவல் மற்றும் செய்தித் துறை, சென்னை–2.
பதிப்பாசிரியர், தமிழரசு இதழ், சென்னை.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பக) துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை செயலர் அவர்களின் முதுநிலை
முதன்மைத் தனிச்செயலர், சென்னை–9.
பகதுறையின் அனைத்து துறைத் தலைவர்கள்,
கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/முதன்மைச் செயலாளர்கள்/
செயலாளர்கள், தலைமைச்செயலகம், சென்னை–9
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை–9.
தொடர்புடைய அனைத்துதுறைகள்/இயக்ககங்கள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

22/5/17.
பிரிவு அலுவலர்.

## இணைப்பு – 1. தேர்வுத் திட்டம்

அரசாணை (நிலை) எண். 100, பள்ளிக் கல்வி (அ.தே.1)த் துறை, நாள். 22.5.2017

| பாடம் | | நேரம் | மதிப்பெண் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | அக மதிப்பீடு | செய்முறைத் தேர்வு | எழுத்துத் தேர்வு | மொத்த மதிப்பெண்கள் | |
| **மேல்நிலை முதலாமாண்டு** | | | | | | | |
| பகுதி I தமிழ் / பிறமொழி | தாள் – 1 | 2½ | 10 | - | 90 | 100 | 100# |
| | தாள் – 2 | 2½ | 10 | - | 90 | 100 | |
| பகுதி II ஆங்கிலம் | தாள் – 1 | 2½ | 10 | - | 90 | 100 | 100# |
| | தாள் – 2 | 2½ | 10 | - | 90 | 100 | |
| பகுதி III விருப்பப் பாடங்கள் 4 | செய்முறைத் தேர்வு உள்ள பாடங்கள் | 2½ | 10 | 20@ | 70 | 100 | 4 x 100 = 400 |
| | செய்முறைத் தேர்வு இல்லாத பொதுப் பாடங்கள் மற்றும் தொழிற்கல்வி பாடங்களின் எழுத்துத் தேர்வு | 2½ | 10 | - | 90 | 100 | |
| | தொழிற்கல்வி பாடங்களின் செய்முறைத் தேர்வு | 2½ | 25& | 75 | - | 100 | |
| மேல்நிலை முதலாமாண்டு மொத்த மதிப்பெண்கள் | | | | | | | 600 |

| பாடம் | | நேரம் | அக மதிப்பீடு | செய்முறைத் தேர்வு | எழுத்துத் தேர்வு | மொத்த மதிப்பெண்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| **மேல்நிலை இரண்டாமாண்டு** | | | | | | | |
| பகுதி I தமிழ் / பிறமொழி | தாள் – 1 | 2½ | 10 | - | 90 | 100 | 100# |
| | தாள் – 2 | 2½ | 10 | - | 90 | 100 | |
| பகுதி II ஆங்கிலம் | தாள் – 1 | 2½ | 10 | - | 90 | 100 | 100# |
| | தாள் – 2 | 2½ | 10 | - | 90 | 100 | |
| பகுதி III விருப்பப் பாடங்கள் 4 | செய்முறைத் தேர்வு உள்ள பாடங்கள் | 2½ | 10 | 20@ | 70 | 100 | 4 x 100 = 400 |
| | செய்முறைத் தேர்வு இல்லாத பொதுப் பாடங்கள் மற்றும் தொழிற் கல்வி பாடங்களின் எழுத்துத் தேர்வு | 2½ | 10 | - | 90 | 100 | |
| | தொழிற்கல்வி பாடங்களின் செய்முறை தேர்வு | 2½ | 25& | 75 | - | 100 | |
| மேல்நிலை இரண்டாமாண்டு மொத்த மதிப்பெண்கள் | | | | | | | 600 |
| **மேல்நிலைக் கல்வியின் மொத்த மதிப்பெண்** | | | | | | | **1200** |

@ இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து இரண்டாம் ஆண்டிலேயே செய்முறைத் தேர்வு நடத்தப்படும்

# மொழிப்பாடங்களைப் பொறுத்தவரை, 2 தாள்களின் மதிப்பெண்களின் சராசரியினை (100 மதிப்பெண்ணுக்கு) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

& தொழிற்கல்வி பாடங்களின் செய்முறை தேர்வுக்கு அகமதிப்பீட்டு தேர்வு மதிப்பெண் 25 சதவிகிதமாக நிர்ணயம் செய்யப்படும்.

22/5/17

பிரிவு அலுவலர்.